பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 08 2026** **THURSDAY** **6.30 PM**

மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

**1)** வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளம் விளையாட்டு வீரர்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவதே அரசின் நோக்கம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2)** கைலாஷ் மானசரோவர் யாத்திரை மேற்கொண்ட தமிழகத்தை சேர்ந்த **21** பேர் நேபாளத்தில் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**3)** ஜனநாயகத்தின் அடிப்படைக்கு தேர்தல் பங்கேற்பு மிகவும் அவசியம் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

**4)** நெல் உற்பத்தியின் அளவை பொறுத்து, நெல் கொள்முதல் நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்படும் என்று மாநில உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கடரமணன் கூறியுள்ளார்.

**5)** இந்தியா — இலங்கை இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<<>>>>>>

நாடு முழுவதிலும் உள்ள இளம் தடகள வீரர்களுக்கு வாய்ப்பளித்து அவர்களின் கனவுகளை கேலோ இந்தியா நிறைவேற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

காணொலி வாயிலாக இன்று நடைபெற்ற கேலோ இந்தியா கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய பிரதமர், இளைஞர்களின் சக்தியையும், அவர்களின் விளையாட்டுத் திறனையும் ஒருங்கிணைத்து ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே இது தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வெற்றியையும், பதக்கத்தையும் மட்டுமே இலக்காக கொள்ளாமல், இளைஞர் சக்தியை வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் பணிக்காக பயன்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

உலக அளவில், அதிக அளவிலான போட்டிகளில் இந்திய இளைஞர்களை பங்குபெற செய்ய வேண்டும் என்றும், அவர்களை சிறந்த போட்டியாளர்களாக உருவாக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள கேலோ இந்தியா விளையாட்டு மையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

வேலூரிலிருந்து பிரதமர் உடனான கலந்துரையாடலில் பங்கேற்ற தடகள வீராங்கனை எமது செய்தியாளரிடம் தமது கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.

***(Sound Byte — வீராங்கனை - 50 Sec.)***

<<<<<<<<>>>>>>

கைலாஷ் மானசரோவர் யாத்திரை மேற்கொண்ட தமிழகத்தை சேர்ந்த 21 பேர் நேபாளத்தில் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், காணாமல் போன இந்தியர்களை தேடும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

காணாமல்போன 288 இந்தியர்கள் உடனான தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் தமிழகத்தை சேர்ந்த 37 மற்றும் 49 பேர் அடங்கிய இரு குழுக்களும், மேற்குவங்கத்தை சேர்ந்த 32 பேரும், கேரளத்தை சேர்ந்த 33 பேரும் சிக்கியுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், 73 இந்தியர்கள் Trisuli அனல்மின் திட்டப்பணிகளில் ஈடுபட்டுவந்த பணியாளர்கள் என்று அவர் கூறினார்.

காட்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகம் திட்ட அலுவலர்களுடன் தொடர்புகொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேபாள நிர்வாகத்துடன் இணைந்து இந்தியர்களை பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்டு அவர்களை மீண்டு பத்திரமாக அழைத்து வருவது தொடர்பாக முதலமைச்சர் திரு விஜய் தலைமையில் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மூத்த அமைச்சர்களும், உயரதிகாரிகளும், புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் அதிகாரிகளும் காணொலி வாயிலாக கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைக்கிணங்க புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தின் ஆணையர் திரு ஆஷிஷ் குமார், நேபாளத்திற்கு சென்று மீட்புப் பணிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்றும், நேபாள அரசு மற்றும் அங்குள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடன் ஆலோசித்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

நேபாளத்தில் மீட்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு தவையான மருத்துவ உதவிகள் மற்றம் உளவியல் ஆலோசனைகளை மருத்வர்கள் குழுவினர் வழங்கவும் அவர்களை பாதுகாப்பாக தமிழகத்திற்கு அழைத்து வரவும் தேவையான நவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திரு விஜய் உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

ஜனநாயகத்தின் அடிப்படைக்கு தேர்தல் மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்தும் நோக்கில், இந்திய தேர்தல் ஆணையம் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடையே இன்று விழிப்புணர்வு மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளி, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழங்களில் தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான குழுக்கள் அமைக்கப்படும் என்றார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிப்படையான முறையில் தேர்தல் நடத்தப்பட்டதாகவும், இளைஞர்கள் இந்த தேர்தலில் வாக்களிப்பதற்கு மிகுந்த ஆர்வம் காட்டியதாகவும் திரு **Gyanesh Kumar** குறிப்பிட்டார்.

<<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அவ்வப்போது ஆய்வு செய்து பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கடரமணன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், கொள்முதல் நிலையங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சுமை தூக்கும் தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து அரசு பரிசீலித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அந்தந்த மாவட்டங்களில் நெல் உற்பத்தியின் அளவை பொறுத்து நெல் கொள்முதல் நிலையங்களை விரிவாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு வெங்கடரமணன் கூறினார்.

<<<<<<<<>>>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் வட்டத்தை இரண்டாக பிரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு கே ஏ செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

பேரவையில் கேள்விநேரத்தில் இதனை தெரிவித்த அமைச்சர்,

மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்ததும் புதிய வட்டங்கள் ஏற்படுத்தப்படும் என்று கூறினார்.

குரும்பர், காட்டுநாயக்கர், இருளர் உள்ளிட்ட சமூகத்தினருக்கு தடையின்றி சாதிச் சான்றிதழ் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதுதெடர்பாக, மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும், ஒப்புதல் கிடைத்தவுடன் பாரம்பரியாக வாழும் மக்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்கப்படும் என்றும் திரு கே ஏ செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>

அரசு கல்வியியல் கல்லூரிகளில் நடப்பாண்டில் **M.Ed** படிப்பில் சேருவதற்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவிடுவதற்கான கால அவகாசம் வரும் **31**-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த **20**-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>

தமிழகத்தில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களிலும், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை -50 Sec.)***

<<<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் பணிகள் தொடர்பான ஆய்வு கூட்டம் ஆட்சியர் திருமதி. சினேகா தலைமையில் இன்று நடைபெற்றது

-------------------

மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

------------

மேட்டூர் அணை நீர்மட்டம் இன்று மாலை நிலவரப்படி 89 புள்ளி மூன்று ஏழு அடியாக உயர்ந்துள்ளது.

<<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா — இலங்கை இடையேயான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டிராவில் முடிவடைந்தது.

கொழும்பில் நடைபெற்ற இப்போட்டியின், கடைசி நாளான இன்று இலங்கை இரண்டாவது இன்னிங்சில் **9** விக்கெட் இழப்பிற்கு **429** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டம் டிரா ஆனது.

முதல் இன்னிங்சில் இந்தியா **9** விக்கெட் இழப்பிற்கு **503** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இலங்கை முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் **290.**

இரண்டு போட்டிகளை கொண்ட இந்த தொடரை இந்தியா **1-0** என்ற கணக்கில் கைப்பற்றியது.

-----------

பள்ளி மாணவிகளுக்கான, மாநில அளவிலான டேக்வாண்டோ போட்டி விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் தனியார் பொறியியல் கல்லூரியில் இன்று தொடங்கியது.

**<<<<<<<<<END>>>>>>>**